விதையினைத் தெரிந்திடு

# மகாகவி

மாத இதழ்

சனவரி 2009



உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பிதழ்

**போலியோ!**

*திசம்பர் 21 - இந்தியா முழுமைக்கும் 5 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.*

*உலகில் ரம்மியமான இடங்களை தரிசிக்க முடியாமல் - கூப்பிட்டவுடன் ஒடி வர இயலாமல் - மற்றவர்களைப்போல இயங்க முடியாமல் இன்னும் ஏராளமான நண்பரகள் போலியோவினால் ஊனமுற்றவர்களாக உள்ளனர்.*

*உலக நாடுகளும் போலியோவினை ஒழிக்க பல விழிப்புணர்வு திட்டங்களையும், அதற்காக ஏராளமான நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தி சிறப்பாக செய்துவருகின்றன.*

*இந்தியாவும் பல உலக நாடுகள் வியக்கும் வண்ணம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் - அரசு சுகாதாரத் துறை - மாவட்ட ஆட்சியர்களின் பங்களிப்பு - ஆர்வலர்கள் என ஒன்றிணைந்து போலியோ ஒழிப்புக்காக பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது.*

*ஒவ்வொரு ஆண்டும் பலகோடி குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.*

*கால் தடுக்கி விழும் குழந்தைகளை தூக்கி விடலாம். கால் இருந்தும் எழுந்து நடமாட முடியாத குழந்தைகளை எப்படி தூக்கி விடுவது? வாழ்க்கையில் தடுமாற்றம் ஏற்பட்டால் சரி செய்யலாம். வாழ்வதே தடுமாற்றமானால்?*

*காலிருந்தும் ஊனமுற்றவர்கள் மத்தியில், ஊனமிருந்தும் மற்றவர்களுக்கு முன்னுதாரனமாக விளங்கும் பலர் இந்தச் சமுதாயத்தில் ஒப்பற்றவர்களாக விளங்குகின்றனர்.*

*இருந்தாலும் எதிர்காலம் ஊனமுற்றதாக இருக்கக்கூடாது என்பதற்காக பல போலியோ விழிப்புணர்வு-மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு*


**மகாகவி**

ஆசிரியர் - வெளியீட்டாளர்

**வதிலைபிரபா**

பொறுப்பாசிரியர்

நகரவங்கி **இராதாகிருஷ்ணன்**

வடிவமைப்பு

**ஜெ.சுதாகர்**

கௌரவ சட்ட ஆலோசகர்கள்

திரு. **M. போஸ்,** பி.ஏ.,பி.எல்., வழக்குரைஞர்

திருமதி. **M. சண்முகதேவி,** பி.ஏ.,பி.எல்., அரசுவழக்குரைஞர்



தொடர்பு முகவரி :

ஆசிரியர் **மகாகவி,**

9-6-18/2, ஒற்றைத்தெரு,

வத்தலக்குண்டு - 624 202. தமிழ்நாடு.

பேச : 98650 32723, 96 2 96 52 6 52, 99946 31267

இமெயில் : mahakavimonthly@yahoo.com



**கவிதை : 13 வரி : 1**


## ‘மகாகவி’ இணைய முகவரி

வந்தாலும் அதற்கான முன் முயற்சியை செய்யத்தான் செய்கின்றன. இதுவரை இந்த நல்லுணர்வில் அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைவரும் ஒன்றிணைந்து இயங்கிவந்தனர் என்றே சொல்லலாம்.

ஆனால், தமிழகத்தில் நடந்த அருவறுக்கத்தக்க விசயமாக - விசமமாக போலியோ சொட்டு மருந்து விநியோகித்த அந்த நாளில் - மக்கள் மத்தியில் - தங்களின் சுய இலாபத்துக்காக - சுய அரசியல் லாபத்துக்காக-போலியோ சொட்டுமருந்து உட்கொண்ட குழந்தைகள் மரணமடைந்ததாக வதந்தி ஒன்று திட்டமிட்டு சில விசமிகளால் பரப்பப்பட்டது.

இந்தக் குழந்தைகளின் உயிரா இவர்களின் அரசியல் விளையாட்டிற்கு விளையாட்டு மைதானம் ஆனது? எதில் அரசியல் செய்வது என்று தெரியாதவர்களா இன்று அரசியல் களத்தில் உள்ளனர்?

அரசியலில் விளையாட்டும் - விளையாட்டில் அரசியலும் கேலிக்கூத்து! அரசியலில் போலியானவர்களே உண்மையில் ஊனமுற்றவர்கள்!

**- வதிலைபிரபா,** ஆசிரியர்

# உயிர்ப்பற்று..



எழுத விளைகிறேன்
உங்களுக்கும் எனக்குமான
ஒரு கவிதை

அறுசுவை உணவை அளக்காமல்
அப்படியே மென்று விழுங்கி
தாம்பூல வாய் சிவக்க
தலையணையில் சாய்ந்தபடி
நீங்கள் ஓய்வெடுக்க
பக்க விலா எலும்புகள்
அதிரும்படி நுரையீரல்
பாதித்த என் இருமலின் சத்தம்
உங்களுக்கு பிடிக்காது போனாலும்
சிந்தும் உதிரத்தில்
உயிர்த்தெழும் ஆச்சரியங்கள்
நிகழ்ந்துவிடும் நொடிபரப்பில்
எங்கள் தண்டுவடத்தில் இருந்து
சிந்திவிழும் வியர்வை அமிலத்தில்
பூக்கள் கருகிக்கிடக்கும் உயிர்ப்பற்று.

உங்களின் சிகரெட் சாம்பல் கிண்ணத்தில்
நிறைந்தவைகள் எல்லாம்
எங்களின் வரலாறுகள் என்பதை
சொல்ல வேண்டிய கட்டாயத்தில்
எழுத விளைகின்றேன்..

**- அய்யனார் மூர்த்தி**

கோவை மாநகரில் 15-02-2009 ஞாயிற்றுக்கிழமை

# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

## 4ஆம் மாநாடு - பொதுக்குழு அமர்வு

**மாநாடு நடைபெறும் இடம் :**

பெரியார் படிப்பக அரங்கம்,
திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில்,
காந்திபுரம், கோவை - 44.

- 15-02-2009 பிப்ரவரி திங்கள் ஞாயிறு அன்று காலை 10.00 மணி அளவில் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் 4-ஆம் மாநாடும், பொதுக்குழு அமர்வும் நடைபெறுகிறது.
- மாநாட்டு தொடக்கவிழா, கருத்தரங்கம், கவிச்சரம், உரைவீச்சு, விருதுகள், சிற்றிதழ் கண்காட்சி இன்னும்.. இன்னும்.
- உலகெங்குமுள்ள தமிழ்ச் சிற்றிதழாளர்களை ஒருங்கிணைக்கும் எங்கள் சீரிய பணியில் பங்கேற்க தமிழ் இதழாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
- தமிழ் இதழாளர்கள், அனைத்துச் தமிழ்ச்சங்க நிர்வாகிகள், இலக்கியவாதிகள், படைப்பாளர்கள், சிற்றிதழ் வாசகர்கள் மற்றும் ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
- தமிழ் இதழியல் வரலாற்றில் புதிய சாதனை படைக்க இதழார்கள் அனைவரும் கோவையில் சங்கமிக்க அழைக்கிறோம்.

**வதிலைபிரபா,** தலைவர்,
உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்,
பேச : 98650 32723
99946 31267

**திருவள்ளுவர் கா.நாராயணசாமி,**
**தொ.சி. கலைமணி**
மாநாட்டு அமைப்பாளர்கள்.
பேச : 93448 11070,
93448 11090

உவப்பத் தலை கூடுவோம்
வியக்கப் பலசெயல் புரிவோம்

# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க விருதுகள் - 2008

## பரிசுத்தொகை : ரூ.11 ஆயிரம்

**சமுதாய மறுமலர்ச்சி இலக்கிய விருது** - ரூ. 3000/-
(3 இதழ்களுக்கு)

**பாரதி இலக்கிய விருது** - ரூ. 1000/-
( மூத்த படைப்பாளருக்கான விருது)

**வல்லிக்கண்ணன் இதழியல் விருது** - ரூ. 1000/-
(மூத்த இதழாளருக்கான விருது)

பரிசு வழங்குவோர் :
திரு. திருவள்ளுவர் **கா. நாராயணசாமி,** சமுதாய மறுமலர்ச்சி இதழ், கோவை

**சுருதகேவலி இலக்கிய விருது** - ரூ. 1000/-
(தாவர உணவை பின்பற்றும் இதழுக்கு)
பரிசு வழங்குவோர் : திரு. **மு.ஜென்னாதன்,** சுருதகேவலி இதழ், குந்தகுந்தநகர்.

**பாவேந்தர் இலக்கிய விருது** - ரூ. 1000/-
(பெண் படைப்பாளருக்கான விருது)
பரிசு வழங்குவோர் : பாவலர். **இரா.தம்பித்துரை,**
மாவட்ட பாவேந்தர் பாரதிதாசனார் இலக்கியப்பேரவை, கோவை.

### இதழ்களுக்கான விருதுகள்

**நாகம்மாள் நினைவு இலக்கிய விருது** - ரூ. 1000/-
பரிசு வழங்குவோர் : கவிஞர். **சொ. இராசாமணி (எ) எழிலரசு**
தமிழ் மூகரப்பணி மன்றம், வத்தலக்குண்டு.

**பதியம் இலக்கிய விருது** - ரூ. 1000/-
பரிசு வழங்குவோர் : திரு. **பாரதிவாசன்**,
பதியம் இலக்கிய இதழ், திருப்பூர்.

**களம் இலக்கிய விருது** - ரூ. 1000/-
பரிசு வழங்குவோர் : திரு. **விநாயகமூர்த்தி**
கோவை களம் திரைத்தளம், திருப்பூர்.

**சிகரம் இலக்கிய விருது** - ரூ. 1000/-
பரிசு வழங்குவோர் : திரு. **சந்திரா மனோகரன்,**
சிகரம் மாத இதழ், ஈரோடு.

**குறிப்பு :** 8 இதழ்கள், மூத்த படைப்பாளர், மூத்த இதழாளர், பெண் படைப்பாளர் என மொத்தம் 11 விருதுகள். அனைவருக்கும் ரூ. 1000/- மற்றும் நினைவுப் பரிசும் வழங்கப்படும். இறுதி முடிவை சங்க நிர்வாகிகளே எடுப்பர்.

போட்டியாளர்கள் விண்ணப்பிக்க :

**வதிலைபிரபா,** தலைவர், உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்,
ஒற்றைத்தெரு, வத்தலக்குண்டு- 624 202.
தமிழ்நாடு. பேச : 98650 32723,99946 31267


# இந்த வீட்டில்

தமிழ் நாட்டின்
தென் கோடியில் ஊர்

ஊருக்குள்
உள்ளடங்கிய தெ

தெருவுக்குள்
அடக்கமான வள

வளவுக்குள்
விசாலமான வீடு



வீட்டின் பின்புறம்
தோட்டம்

தோட்டத்தை விட்டிறங்கினால்
ஆறு

சுற்றிச் சூழ
செடி கொடி மரங்கள்

பார்க்கும் இடமெல்லாம்
பச்சைப் பசேல்

ஜன்னல் வழியே
வீசும் காற்று

காலைப் பொழுதில்
காதில் விழும் குயில் சத்தம்

தவிட்டுக் குருவிகளின்
கீச்சுக் கீச்சுகள்

தேடினாலும் கிடைக்காத
அருமையான இடம்

அக்ஷடை வீட்டாருக்கு
ஆயிரத்தெட்டு வேலைகள்

வீட்டுச் சொந்தக்காரருக்கு
வியாபார விஷயங்கள்

அடுத்தடுத்த வீட்டு ஐயர்களுக்கு
கோயில் கைங்கர்யங்கள்

யாரையிட்டும்
எதுவும் பிரச்னையில்லை


இப்படி ஒரு சூழல்
எளிதில் அமையாது

அலைந்ததும் திரிந்ததும் போதும்
அமைதியாய் இருந்து எழுத வேண்டும்

வேறெதற்கு வீடு
இந்த வயதில்!

**-விக்ரமாதித்யன் நம்பி**

# வாங்கிட்டு வையாதீங்கப்பா..



படியரிசி தவறெனும் பரமாத்மாக்களே!
இலவசந் தவறுதான்
இல்லையெனச் சொல்லவில்லை
அப்படிப் பார்த்தால்–
இனவாரியாகப் பிரித்துப்
பின்தங்கியோர்க்கு உதவுவதும்
தவறு என்கிறீர்களா?
இலவச மின்சாரம்..
அதுவும் இலவசந்தானே!
இயற்கை தரும் இன்னல்களை
எதிர்த்துப் போராடி நமக்கு உணவூட்டும்
ஏழை விவசாயிகளுக்காக..
படியரிசி பஞ்சை பராரிகளுக்காக..
பட்டு மெத்தைக்காரர்களுக்கல்ல.
அரிசி ஒரு ரூபா, குருமா இருபத்தஞ்சு
எனத் திரித்துப் பேசாதீர்!
அரிசியிற் சோறு பொங்கி வெங்காயங் கடித்து
அரை வயிரையாவது நிரப்பும்
ஏதுமிலார்க்குதான் அது.
இருபத்தைந்துக்குக் குருமா வாங்கி
இரைப்பை நிரப்புவோர் உம்மைப்போல்
வசதி படைத்தோர்தான்,
என்புதோல் போர்த்த உடம்பினரல்ல
முன்னர் தாதுப் பஞ்ச காலத்தில்
புளிய இலையை அவித்துண்டும்
புண்ணாக்கையும் சோற்றுக் கற்றாழையையும்
தின்றும் உயிர்பிழைத்தது அறியீரோ?
இலவச டி.வி., இரண்டேக்கர் நிலம், கேஸ் ஸ்டவ்
இலஞ்சம் அல்ல: எளியோரை உம் மட்டத்துக்குத்
தூக்கிவிடத்தான், நீர் அனுபவிப்பதையவர்
அனுபவிக்கலாகாதா?
உமக்கு விருப்பமில்லையெனில்
ஓடிப்போய் ஏன் வாங்குகிறீர்?
வாங்கிவிட்டு யாரோ சொன்னதைக் கேட்டு ஏன் வைகிறீர்!
வாங்குதிறன் அதிகமாகிவிட்டதை அறிவீரா?
இலவசம் வேண்டாமெனப் பிரச்சாரம் செய்வது
சுபிட்சத்தை நோக்கி நாடு வெற்றிநடை போடுகிறதென
எடுத்துக் கொள்ளலாமா?
இதற்குப் பதில் சொல்லும்.

–த. கருணைச்சாமி

கணவரைப் பற்றி
# செல்லம்மாள் பாரதி
(1922ல் பாரதியின் நூலொன்றில் எழுதிய முகவுரை)

- கிரிஜா மணாளன்

தமிழ்நாட்டு மக்களே!

நான் படித்தவள் அல்ல. இந்த நூலுக்கு முகவுரை எழுத நான் முன்வரவில்லை. அதற்கு எனக்கு சக்தியுமில்லை. என்னைப்போல இந்த நாட்டில் லக்ஷக்கணக்கான ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். என் புருஷன் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி இந்த நாட்டில் பிறந்தார், வளர்ந்தார், வாழ்ந்தார், இறந்தார். கடவுளின் திருவிளையாடலில் இப்படி ஒரு ஆன்மா இவ்வுலகில் ஜனித்து, சொற்பகாலம் தங்கி, சிற்சில காரியங்களைச் செய்துவிட்டு, திரும்பிப் போய்விட வேண்டுமென்ற கட்டளையின் படி, என் புருஷனும் ஜனித்து, செய்ய வேண்டிய காரியங்களை அவசரம் அவசரமாகச் செய்து விட்டு, காலம் சமீபித்தவுடன், இறப்பதும் ஓர் கடமையாகக் கொண்டு அதனையும் செய்து மடிந்தார்.

1904ம் வருஷத்தில் ‘சுதேசமித்திரன்’ உபபத்திராதிபராக அமருமுன்பே, நம் நாட்டைப்பற்றிய கவலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. எட்டையபுரம் சமாஸ்தானாதிபதியின் கீழ் தான் ஏற்றுக்கொண்ட வேலையைத் திரணமாக நினைத்துத் தள்ளினார். மதுரை சேதுபதி வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதர் வேலையையும் அற்பமாக எண்ணித் தள்ளினார். சுதேசமித்திரனுக்கு உழைக்க ஆரம்பித்ததும் அவரது உள்ளம் மலர்ச்சியடைய ஆரம்பித்தது. சுமார் இரண்டு வருஷம் கழித்தபின் ‘இந்தியா’ வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். உடல் பொருள் ஆவி மூன்றையும் தேச கைங்கரியத்திற்கு முழுமனதுடன் அர்ப்பணம் செய்தார்.

சரஸ்வதி தேவி அவர் நாக்கில் நர்த்தணம் செய்ய ஆரம்பித்தாள். ‘வந்தேமாதரம்’ என்ற சப்தம் அவரது ஹிருதயத்திலிருந்து முழுத்தொனியுடன் கிளம்பி, தமிழ்நாடெங்கும் பரவிற்று, வீடு, வாசல், மனைவி, பிள்ளைகுட்டி, ஜாதி வித்தியாசம், அகந்தை முதலியன முதலியவை மனதின்று விட்டு அகன்றன. தேசப்பிரஷ்டமானார். புதுவையில் தேசபக்தி விரதத்தை அநுஷ்டித்தார். திரும்ப வந்து தந்நாட்டை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற அவா அதிகரித்ததால் அதற்காக சில

நிபந்தனைகளை ஒப்புக்கொண்டார். மறுபடியும் சுதேசமித்திரனில் ஒரு வருஷம் உழைத்தார். தான் வந்த காரியம் முடிவடையவே விண்ணுலகம் சென்ற தேசபக்தர் கூட்டத்தில் தானும் போய்ச் சேர்ந்துகொண்டார்.

எதுவும் யோசித்தாக வேண்டியதில்லை. திடீர் திடீர் என்று எண்ணங்கள்; புதிய புதிய கொள்கைகள்; புதிய புதிய பாட்டுக்கள் - எனது இரு காதுகளும், மனமும், ஹிருதயமும் நிரம்பித் ததும்பும் இந்த ஒரு பாக்கியம் நான் பெற்றேன். இம்மாதிரி பாக்கியம் பெற எத்தனை கோடி ஜென்மம் வேண்டுமானாலும் திரும்பத் திரும்பப் பெறத் தயாராயிருக்கிறேன்.

அவரது தேகத்தின் ஜீவன் போய்விட்டது. அவரது ஜீவனுக்காதாரமாக இருந்த பாரதமாதாவின் ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ்நாடு உள்ளளவும், தமிழ் நாட்டில் ஒரு மனிதனோ அல்லது ஒரு சிறு குழந்தையோ தமிழ் பேசிக்கொண்டிருக்குமளவும், பாரதியின் மூலமாக நமக்குக் கிடைத்த ஜீவசக்தி நிலைத்திருக்குமென்று என் ஹிருதயம் சொல்கிறது. இதனை நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள். இஃதொன்றுதான் நான் உங்களுக்குச் சொல்ல முன்வந்தேன். நீங்கள் நீடுழி வாழ்க!

பாரதியின் நூல்கள் முழுமையும் அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை என் ஜீவன் இருக்கும்வரை நான் வகித்து, பிற்பாடு தமிழ்நாட்டிற்குத் தத்தம் செய்துவிட்டு போகத் தீர்மானித்திருக்கிறேன். வந்தே மாதரம்!




வாருங்கள் வாசகர்களே!
படைப்பாள நண்பர்களே!
இன்னும் பயணிப்போம்...

2009 பிப்ரவரியில்
**மகாகவி** - 14ம் ஆண்டில்

இதழ் கூடுதல் க(வ)னத்துடன் தயாராகிறது.
படைப்பாளிகள் படைப்புக்களை விரைந்து அனுப்பவும்.
14ம் ஆண்டிதழுக்காக - என குறிப்பிடவும்.


**இதழ் வளர்ச்சிக்கு சந்தா, நன்கொடை அனுப்பி உதவுங்கள்**

புரவலர் : ரூ.3000/- ஐந்தாண்டுச்சந்தா : ரூ. 300/- ஆண்டுச்சந்தா : ரூ. 60/-

படைப்பாளர்கள் பிரதியெடுத்துக்கொண்டு படைப்புக்களை அனுப்பவும்.

தண்டோரா

## மகாகவி பாரதி ஐந்தமிழ் விருது

கோவை பாரதியார் பல்கலைக் கழக ஆராய்ச்சி மையம் சார்பில் புதுச்சேரியைச் சேர்ந்த தமிழ் மாமணி பாவேந்தரின் புதல்வர் திரு.மன்னர்மன்னன் அவர்களுக்கு 'மகாகவி பாரதி ஐந்தமிழ் விருது' வழங்கப்பட்டது. விருதினை தமிழக அமைச்சர் பொங்களூர் பழனிச்சாமி வழங்கினார். ஐந்தமிழ் விருது வல்லுனர் குழுத்தலைவர் திரு பொள்ளாச்சி நா.மகாலிங்கம், தென்கச்சி கோ.சுவாமிநாதன், பாரதியார் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் சி.மா.இரவிச்சந்திரன், விருதுகள் அமைப்பாளர் தே.ஞானசேகரன் பங்கேற்றனர்.




பாவேந்தரின் புதல்வர், பாவலர் மன்னர்மன்னன் அவர்களுக்கு விருதினை அமைச்சர் பொங்களூர் பழனிச்சாமி வழங்கினார் அருகில் திரு பொள்ளாச்சி நா.மகாலிங்கம்.

## பாரதித் திருவிழா

சென்னை - பார்த்தசாரதி சன்னதி முகப்பில் ஜதிபல்லக்கு நடைபெற்றது. சென்னை மாநகர காவல்துறை ஆணையர் கே. இராதாகிருஷ்ணன் ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார். பாரதி குலத்தோன்றல் திருமதி.லலிதா பாரதி எதிரொலி விஸ்வநாதன் அவர்களுக்கு பொற்கிழி வழங்கினார். கவிஞர் வாலிக்கு 2008 க்கான 'பாரதி விருது' வழங்கப்பட்டது. நிகழ்வை சென்னை வானவில் பண்பாட்டு மையம் சிறப்பாக ஏற்பாடு செய்தது.

## பாரதி விழா

ஈரோடு கொங்கு கலையரங்கில் ஈரோடு மக்கள் சிந்தனைப்பேரவை பாரதி விழாவினை நடத்தியது. தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களுக்கு 'பாரதி விருது' வழங்கப்பட்டது. இசைப்பேரரசி கே.பி.சுந்தராம்பாள் அவர்களின் திருஉருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. ஸ்டாலின் குணசேகரன், திரைப்படக்கலைஞர் மனோரமா, பே.சுத்தானந்தன். சாந்தி துரைச்சாமி பங்கேற்றனர்.

## அண்ணா நூற்றாண்டு விழா

மும்பை கி.ஆ.பெ.விசுவநாதம் கலையரங்கில் அறிஞர் அண்ணா நூற்றாண்டு தொடக்கவிழா நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கொ.வீ.நன்னன், வி. தேவதாசன், வெ.பன்னீர் செல்வன், எம்.கருன், இயேசுராஜ் சாமுவேல் பங்கேற்றனர்.

## ஜீவியின் கவிதைக்கு தமிழக அரசு பரிசு – தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் வழங்கினார்



கவிஞர் ஜீவி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கவிதைப் போட்டியில் பரிசும் சான்றிதழும் பெறுகிறார்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை தமிழ் ஆட்சி மொழியாகி 50 ஆண்டு ஆனதை ஒட்டி கவிதைப் போட்டி நடத்தியது. கவிதைப் போட்டியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநிலத் துணைச்செயலாளர் கவிஞர் ஜீவி பரிசு பெற்றார். பரிசுத் தொகை ரூபாய் 3000/- மற்றும் சான்றிதழை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் வழங்கினார். முதல்வர் கையால் விருது பெற்ற கவிஞரை பாராட்டி மகிழ்வோம்.

## பெங்களூருவில் – உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் இதழாளர் சந்திப்பு சிறப்பாக நடந்தேறியது

14.10.2008 ஞாயிறு அன்று காலை 10 மணியளவில் கருநாடக மாநிலம் பெங்களூரு நகர் ஸ்ரீ ராமபுரம் சேவா ஆசிரமம் பள்ளி வளாகத்தில் இதழாளர் சந்திப்பு சிறப்பாக நடந்தது. கருநாடக மாநில அமைப்பாளரும் 'குறள் ஒலி' இதழாளருமான திரு. வே. அரசு தலைமை தாங்கினார் 'ஊற்று' இதழாளர் ப.இளவழகன், கோவை 'சமுதாய மறுமலர்ச்சி' இதழாளர் திருவள்ளுவர் கா.நாராயணசாமி முன்னிலை வகித்தனர். முன்னதாக சங்கப் பொதுச்செயலாளர் சொர்ணபாரதி வரவேற்றார். சங்கத்தலைவர் வதிலைபிரபா சங்கச் செயல்பாடுகள் குறித்தும், எதிர்காலத்திட்டங்கள் குறித்தும் பேசினார். 'தமிழர் முழக்கம்' இதழாளர் வேதக்குமார் 'அறிவுச்சுடர்' இதழாளர் வ. மலர்மன்னன், லோ.சண்முகசுந்தரம் பங்கேற்றனர். நிகழச்சியை திரு.வே.அரசு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## மக்களைப் பற்றி எழுதுபவர்கள் – மக்களைப் பற்றி சிந்திப்பவர்கள் என்றுமே புறக்கணிக்கப் படுவதில்லை

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க படைப்பாளரும், நாவலாசிரியரும், எழுத்தாளருமான **மேலாண்மை பொன்னுச்சாமி** திருநெல்வேலி மாவட்டம் மேலாண்மறைநாடு எனும் சிற்றூரைச் சார்ந்தவர். இவருக்கு **சாகித்திய அகாதெமி** விருது கிடைத்துள்ளது. இவருக்கு இவ்விருது கிடைத்ததன் மூலம் சாகித்திய அகாதெமி ஒரு புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது. எழுத்தாளருக்கு வாழ்த்துக்கள்.

# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க
# **ஆய்வறிக்கையும் - அழகுக் குறிப்புகளும்..**

*தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் **11** -வது மாநில மாநாட்டில் கலை இலக்கிய பண்பாட்டு ஆய்வறிக்கை - அமைப்பு அறிக்கையை சுமார் **142** பக்க அளவில் நூலாக வெளியிட்டுள்ளது. அமைப்பு சார்நத பல்வேறு விசயங்களை பதிவு செய்திருக்கிறார்கள். சங்க உறுப்பினர்களின் செயல்பாடுகள் - வெளியீடுகள் - கொள்கை சார்ந்த செயல்பாடுகள் என பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அதில் **42** -ஆம் பக்கத்தில் தமிழக கலை இலக்கியச் சூழல் எனும் தலைப்பில் இலக்கிய இதழ்களின் அரசியல், இணைய இதழ்கள், வெகுசன இதழ்கள் என இதழ்களை மூன்று வகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*சில மையங்களை மையப்படுத்தி இதழ்களை வகைப்படுத்தும் போக்கை நாகரிகமாக கையாண்டுள்ளதாக? பதிவு செய்யப்பட்டுள்ளது. வராத இதழ்களை பட்டியலிட்டுள்ளதும் வேடிக்கையாக உள்ளது.*

*'எதிரெதிர் திசைகளில் நின்றாலும் இலக்கிய வளர்ச்சி என்பது இதழ்கள் சார்ந்தே நிகழ்ந்துள்ளது' என்பதை தவிர்க்க முடியாமல் ஆமோதித்தும் உள்ளார்கள். ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் இலக்கிய வளர்ச்சி - அதன் நகர்வு இதழ்கள் சார்ந்தே அமைந்துள்ளது என்பதை மறுக்க இயலாது.*

*தமுஎச தோழர்களை தக்கவைப்பதற்கும் ஒவ்வொரு சமயமும் சிற்றிதழ்களே துணைபுரிந்திருக்கின்றன என்பதை மறுக்க இயலாது. 'செம்மலர்' போன்ற இதழ்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்க இயலாத நிலையில் சில தமுஎச தோழர்களால் ஆங்காங்கே துவக்கப்பட்ட சிற்றிதழ்களின் பங்களிப்பு சற்று கூடுதலானது. ஆனால் ஆய்வறிக்கையில் அதுபற்றிய சிறு சலனமும் இல்லாதது ஆச்சரியமே! (இன்னமும் சில சிற்றிதழ்கள் தோழர்களால் பல ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவருகிறது என்பதை மறுக்க முடியுமா?)*

***1997** முதல் **2005** வரை வதிலைபிரபா தமிழ்ச்சிற்றிதழ்கள் சங்கத்தில் (தாஸ்னா) பொதுச்செயலாளராக இருந்தபோது ஒருபோதும் தமுஎச ஆய்வறிக்கையில் அந்த அமைப்பு பதிவு செய்யப்படவில்லை. அந்தக் காலத்தை தமிழ்ச்சிற்றிதழ்களின் எழுச்சிக் காலம் என்று கூட சொல்லலாம். அன்று ஏன் தமுஎச*

*சிற்றிதழ்கள் சங்க அமைப்பை கண்டு கொள்ளவில்லை? ஒருவேளை தற்போது சில தோழர்கள் அந்த அமைப்பில் பொறுப்பில் உள்ளதால் பதிவு செய்யப்படுகிறதோ? கடந்த 5 ஆண்டுகளாக ஒரு மாநாட்டைக் கூட உருப்படியாக நடத்த முடியாத அமைப்பை தற்போது தாங்கிப் பிடிக்கும் மர்மம்தான் என்னவோ?*

*2005-ம் ஆண்டு சென்னை எழும்பூர் இக்சா அரங்கில் இலக்கியப் பிதாமகன் வல்லிக்கண்ணன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் தொடர்ந்து பல மாநாடுகளை, இதழாளர் சந்திப்புகளை நடத்தி வருகிறது. திரு. வல்லிக்கண்ணன் ஆலோசகராகவும், அவரது மறைவுக்குப் பிறகு திரு. பிரபஞ்சன் ஆலோசகராகவும் உள்ளனர். பல்வேறு இதழ்களுக்கு ஆண்டுக்கு சுமார் 11,000/- வரை விருதுகள், பல்வேறு நிதியுதவி உள்ளிட்ட நலத்திட்டங்கள் என தொடர்ந்து சிறப்பாக செயல்படுகிறது. அதுமட்டுமல்ல பிப்ரவரியில் கோவையில் 4-ஆவது மாநாடும் நடைபெற உள்ளது. தமிழகம், புதுச்சேரி, கருநாடகம் என தனது வேரைப் பரப்பிய உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் தற்போது சுமார் 75 இதழாளர்களை உறுப்பினராகக் கொண்டுள்ளது. இதில் நமது தோழர்கள் நடத்தும் இதழ்களும் அடங்கும்.*

*இன்னமும் பல ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவருகின்ற தனித்தமிழ், திராவிட பாரம்பரியம், தேசிய நீரோட்டம், தமிழ் அமைபபுகள், இன்னமும் தனது வாழ்வுரிமைக்காக போராடும் ஈழ விழிப்புணர்வு இதழ்கள், இன்னமும் கருநாடாகாவில் தனது இருப்பை வலியுறுத்தும் தமிழ் உணர்வாளர் நடத்தும் இதழ்கள் இவைகளையெல்லாம் தவிர்த்து எப்படி இலக்கிய இதழ்களின் அரசியல் பதிவு செய்யப்பட முடியும்?*

*நவீன இதழ்கள் மற்றும் செம்மலர் மட்டுமே புதிய இதழியல் அரசியல் கோட்பாட்டினை நிலை நிறுத்துகிறது என்றால் நவீன இதழ்களும் செம்மலரும் ஒரே நேர்கோட்டில் இயங்குகின்றன என்று அர்த்தமா?*

*தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு என்ற ஒரு மரபு இருக்கிறது. நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. ஒரு காலத்தில் தமிழ் இலக்கியச் சூழலில் பாதிப்பை உண்டுபண்ணிய அமைப்பு. இது போன்ற சறுக்கல்களால் தொடர்ந்து சறுக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். வரலாறு இயல்பாக நடந்துகொண்டிருக்கும் காலப் பதிவு. அதை யாரும் புரட்டிப் போட்டுவிட முடியாது.*

**-வதிலை பிரபா**

# கூட்டு வண்டி

எனது வலது ஓர
மேல் வரிசை
சொத்தைப் பல்லைப் பிடுங்கிய
டாக்டர். ஜான் ராஜநாயகம்
சாலை விபத்தில்
இறந்து போனார் !

இன்றைக்கெல்லாம்
நாற்பதைத் தண்டாத வயது.
மனைவியும்
இரண்டு பிள்ளைகளும்.
நகரின் மிக நெரிசலான
அக்ரஹாரம் தெருவில் தான்
அவரது ஆஸ்பத்திரி

புராதான காலத்துக்கு
ஒப்பாய் சொல்லத்தோனும்
கட்டிடத்தில்
முன்புறம் கிளினிக்கும்
பின்புறம் வீடுமாய் :
பல்பிடுங்க வாய்திறக்கும்
நேரம் வரும்
குக்கர் விசில் சப்தமும்
பல் பிடுங்கிய பின்வரும்
குழம்பு தாளிக்கும்
வாசனையும்
அவ்விடத்தின்
இனிய முரணை அறிவிக்கும்.

நகரெங்கும்
பல் மருத்துவர்கள்
பலர் இருந்த போதும்
ஆத்திர அவசரத்திற்கு
கடன் சொல்லியும்
சொன்ன கட்டணத்தைவிட
குறைத்துத் தரும் வசதியும்
அவரிடமேஇருந்தது.
எனக்கு,

மலையாளம் கலந்த தமிழில்
பற்கள் பற்றியும்
அதன் பராமரிப்பு பற்றியும்
மக்களிடம் இல்லாதிருக்கும்
விழிப்புணர்வு பற்றியுமாய்
மணிக்கணக்கில் பேசுவார்.

எங்களது பேச்சினூடே
வந்து போகும் அவரது மனைவியும்
அவரது எண்ணத்தை
பிரதிபலிப்பாள்.
பல சமயங்களில்
அவரது பேச்சின் ஆரம்பம்
அவளின் துணை கொண்டே
ஊற்றெடுத்து விரியும்

இருவருமாய்
இலக்கியம், சினிமா, அரசியல் என
பேசும் நேரம்
நான் கேட்டுக்கொண்டிருப்பேன்.
நான் கேட்கும் வினாக்களுக்கு
அவர்களது பதில்
மத்தாப்பூவாய் சிரிக்கும்

நோயாளிகள் அதிகமில்லாத
நாட்களில் - நீண்ட
எங்களது பேச்சுடனும்
எங்களுள் நீடித்த
உறவுடனும் - அவரின்
இறப்பை
பதிவு செய்துவிட்டுப் போன
நாட்களில் - நகர்வுகள்
மீட்டுத்தருமா
இது மாதிரியான
இன்னொரு குடும்பத்தை?



**- விமலன்**

# அறிவின் திறம்..



கனவு மெய்ப்படவேண்டுமென்று
சந்திரனைத் தொட்டது
நம் விண்கலம்.

சோறூட்ட அழைத்த காலம்
அன்று!
சோர்வகற்ற
விண்வெளிப் பயணத்துக்கு
அடித்தளம் அமைத்தது இன்று!
நாளை நிலவில்
குடியேறும் காலமும் வரலாம்!

நிலவின் குளுமையை
இரவில் அனுபவித்த நாம்,
நிலவின் அழகில்
மனதைப் பறிகொடுத்த நாம்,
நிலவின் தரையில்
குதித்து விளையாடப் போகிறோம்.

நிலவு மட்டுமல்ல
மற்ற கோள்களையும்
அடிமைப் படுத்துவோம்
அறிவின் திறத்தால்!

**-அ. கௌதமன்**

# கொகின்ஷுப் பூக்கள்

அழகழகாய் ஆடையணிந்துப் பழகிய
இந்த உடல் இறப்புக்குப் பின்
அரைநாண் கயிற்றையும் அறுத்தெறிந்து
நிர்வாணமாய குழியில் போட்டு
மூடிவிடுகறார்கள் அல்லது
எரித்து விடுகிறார்கள்
மரணித்தவன்
ஏழையா? பணக்காரனா? என்பது
மண்ணுக்குத் தெரியுமா?

e

மழையில் நனைந்துக் குளித்து
மன அழுக்குகள் நீக்கி
எத்தனை உற்சாகமாய்ப்
பூத்திருக்கிறது அந்தப் பூக்கள்
உலகத் துயரெல்லாம் மறந்து..!

e

தன்னை
என்ன பெயரிட்டுஅழைக்கிறார்கள்
என்று தெரியாது ஊமையனுக்கு
அவனுக்கென்றொரு பெயரிருந்தாலும்
ஊமை(யன்)யா என்றே
சைகையால் அழைக்கிறார்கள்
எல்லோருமே..



**-ந.க. துறைவன்**


சிறுகதை

# பெட்டிக்கடை கந்தசாமி

- பா. சேதுமாதவன்

மெயின்ரோட்டில் பெட்ரோல் பங்குக்கு அருகில் இருந்தது அந்தப பெட்டிக்கடை. அதன் முதலாளி கந்தசாமி. பஞ்சு போல நரைத்த தலைமுடி. அதற்குப் பொருந்துவது போல வெள்ளை கதர் வேட்டி, கதர் சட்டை. சினேகத்தை வெளிப்படுத்தும் புன்னகையை இலவசமாக விற்பனை செய்கிறாறோ என்று எண்ணும்படியாக எப்பொழுதும் சிரித்த முகமாய் இருப்பார். இதுதான் பெட்டிக்கடை கந்த சாமியின் தோற்றம்.

டாஸ்மாக் கடைக்கு அருகில் இருப்பதால் முறுக்கு, சிப்ஸ் பாக்கெட், கலர், சிகரெட் என்று கடையில் வியாபாரம் மாலை வேளைகளில் தூள் பறக்கும். டாஸ்மாக் கடைக்கு அடிக்கடி விஜயம் செய்யும் குடிமகன்களில் பெரும்பாலானோர் கந்தசாமிக்கு நன்கு பரிச்சயமானவர்கள். சொந்தக்கதை, ஊர்க்கதை என்று அவரிடம் மனம் விட்டுப் பேசுவார்கள். அவரும் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுகளைக் கூறுவார்.



ஒரு நாள் வியாபாரம் மந்தமான மதிய நேரம். பணத்தை ஆட்காட்டி விரலுக்கும், நடுவிரலுக்கும் நடுவில் வைத்து நீட்டிய வாறே பீடி கேட்டான் லோடுமேன் பன்னீர்செல்வம்.

பீடிக்கட்டை வாங்கி, அதில் இருந்து ஒரு பீடியை உருவி தொங்கிய கயிற்றில் இருந்த நெருப்பில் அதைப் பற்றவைத்தவாறே கந்தசாமியிடம் உரையாடத் தொடங்கினான்

பன்னீர்செல்வம். ''என்ன பெரியவரே! மத்தியான நேரமில்ல, அதான் தூக்கம் அசத்துதுபோல் தெரியுது. அப்புறம் சமாச்சாரம் ஏதாச்சும் உண்டா? பையன் கோபாலு இப்போ வேலைக்கு கீலைக்குப் போறனா?''

''டீ கடைவீதியில உரக்கடை வச்சிருக்காரே பெரியசாமி அண்ணன், அவரப்புடிச்சி அவன ஒரு உரக்கம்பெனியில வேலைக்கு சேத்துவுட்டிருக்கேன் பன்னீரு! ஆறு மாசமா அங்கதான வேலைக்குப் போயிட்டு இருக்கான்.''

''எப்படியோ அவன் பொழப்ப அவன் பாத்துக்கிட்டா உங்களுக்கும் ஒரு பாரம் எறங்கின மாதிரிதானே. சரி.. நான் வரேன்!'' அவரிடம் விடைபெற்றுச் சென்றான் பன்னீர் செல்வம்.

மாலையில் டாஸ்மாக் கடையில் நல்ல கூட்டம். எனவே, கந்தசாமியும் சுறுசுறுப்பாய் இயங்க வேண்டியிருந்தது.

'வீட்டில் மனைவி மதிப்பதில்லை..'

'பையனுக்கு சரியான வேலை கிடைப்பதில்லை.. '

'மேலதிகாரி அடிமை போல் வேலை வாங்குகிறார்'

கடைக்கு வருபவர்களின் இப்படிப்பட்ட விதவிதமான புலம்பல்களைப் பொறுமையாய் கேட்டு, அவரவர் குணாதிசயத்துக்கு ஏற்றார்போல் பேசி சமாளித்து பிரச்சினை எதுவும் வராமல் வியாபாரத்தையும் கவனித்தார் கந்தசாமி.

பத்து நாட்கள் கழித்து அதே போன்ற மாலைநேரம். கந்தசாமி முகத்தில் கவலை இருள் போர்வை போர்த்தியிருந்தது.

''என்ன கந்தசாமி அண்ணே! பத்து நாளா கடையத் தொறக்கல.. ஊட்டி, கொடைக்கானல்னு ஜாலியா வீட்டுககாரம்மாவோட டூர் போயிட்டு வந்தீங்களா!'' கிண்டல் தொனிக்கக் கேட்டான் ஆட்டோ டிரைவர் சேகர்.

பதிலளிக்காமல் அவனை ஊடுருவுவது போல ஒரு பார்வை பார்த்தார் கந்தசாமி.

''என்னண்ணே! சேகரு விளையாட்டாத்தானே கேட்டான்.. அதப் போயி தப்பா எடுத்துக்கறீங்களே.. சேகருக்கு ஆதரவாய் குரல் கொடுத்தான்'' அருகில் இருந்த அவன் நண்பன் மணிவேல்.

''தம்பிகளா! நீங்க அப்பா மாதிரி நெனச்சு நான் சொல்றதக் கொஞ்சம் கேளுங்க! தயவு செஞ்சு இந்த சின்ன வயசுல குடிக்கு அடிமையாகி உடம்பக் கெடுத்துக்காதீங்க..கொஞ்சம் கொஞ்சமாக கறையான் மாதிரி உங்கக்குடல அரிச்சிரும் இது. இந்தப் பழக்கத்த எப்படியாச்சும் உட்ருங்க தம்பிகளா.''

‘‘தோ பாருடா.. சாத்தான் வேதம் ஓதறத! படிக்கறது ராமாயணம்.. இடிக்கறது பெருமாள் கோயில்ங்கற கதையா நம்பள வச்சு சம்பாதிச்சு சாமியாரு கணக்கா அட்வைசை கொடுக்கறாரு பாரு.. இந்த டாஸ்மாக் கடை இல்லாட்டி நீ உன் கடைக்குப் பெரிய பூட்டா போட்டுற வேண்டியதுதான, தெரியுமா?’’ உள்ளே சென்ற சரக்கின் வீரியத்தால் கொஞ்சம் தெனாவெட்டாகவே பேசினான் மணிவேல்.

அவன் கூறியதை ஆமோதிப்பது போல, பெரிதாகத் தலையை ஆட்டினான் சேகர்.

‘‘மணிவேலு! நான் சொல்றதக் கொஞ்சம் கேளு. இத்தன நாள் இல்லாம, இன்னிக்கு இப்படி நான் அறிவுரை சொல்றேன்னா, அதுக்குக் காரணம் இருக்கு. உரக்கம்பெனியில வேல பாத்த என் பையன் கோபாலு எப்படியோ குடிப்பழக்கத்த கத்துக்கிட்டான். நான் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன். என் பேச்ச அவன் கேக்கல. மஞ்சக் காமால வந்து கொஞ்ச நாள் குடிக்காம இருந்தான். நல்லா குணமாகிறதுக்கு முன்னயே அவன் திரும்பவும் குடிக்க ஆரம்பச்சிட்டான். அது கடைசியில அவன மரணக்குழியில தள்ளிருச்சி தம்பி! அவன் காரியத்த முடிச்சிட்டு பத்து நாளுக்கு அப்பறம் இன்னிக்குத்தான் நான் கடையத் தொறந்தேன். என்ன செய்யறது, வயத்துப்பாடு இருக்கே! வேற இடம் பாத்துக்கிட்டு இருக்கேன். கூடிய சீக்கிரம் வேற எடத்துல கடை வெச்சிருவேன். இரு கைகளாலும் முகத்தை மூடியவாறே தேம்பித்தேம்பி அழுதார் பெட்டிக்கடை கந்தசாமி. ●

---

# வாசகர்களுக்கு...

மகாகவி வாசகர் வட்டத்திற்கு தொடர்ந்து கிடைக்கின்ற பெரும் வரவேற்பு மகிழ்ச்சியளிக்கிறது. வாசகர் வட்ட மகாகவியின் தலையாய நோக்கமாகிய ‘விதையினைத் தெரிந்திடுதலில்’ கூர்மையாயிருக்கும். இது விவாதம் மற்றும் கலந்தாய்விற்கான களமாக விளங்கும். படைப்புத்திறன், இதழியல் பயற்சி பட்டறையாகவும் விளங்கும். ஆர்வலர்கள் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

நகரவங்கி
**இராதாகிருஷ்ணன்**,
தலைவர்,
மகாகவி வாசகர் வட்டம்.
பேச : 99523 56791




**டாக்டர். எம். எஸ். கோவிந்தராஜன், விஜயபுரம் வடக்கு**

அட்டையில் பாரதியாரின் ஓவியம் மனதை மயக்கியது. வரைந்த ஓவியருக்கு பாராட்டுக்கள். இந்தியாவின் தற்போதைய நிலையை தயைங்கத்தில் ஆசிரியர் நன்கு விளக்கி உள்ளார். இப்போதெல்லாம் ஆட்சியாளர்கள் அரசியல் மட்டும் செய்கிறார்கள், ஆட்சியும் செய்யவேண்டும் என்பது மிகச் சரியே! தென்றலாய்த் தாலாட்டும் பாரதியின் கருப்புக் கோட்டு கவிதைகள் மிகச் சிறப்பாக இருந்தது.

**வீ. தங்கராஜ், காஞ்சிபுரம்**

மலருக்கு வாசம் இருந்தாலும் வண்ணமும் தேவை என்பது இயற்கை என்னும் படைப்பாளிக்குத் தெரிந்திருக்கிறது. மனங்கவரும் கருத்துக் களஞ்சியமாகத் திகழ்ந்தாலும் மகாகவிக்கு தோற்றப் பொலிவும் தேவை என்பதை உணர்ந்து புதுப் பொலிவோடு வெளியிடும் ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்!

**எஸ். பிச்சை மொஹையதீன், திருச்சி.**

பாட்டுக்கவி அட்டையில். அவன் விரும்பிய பூனையுடன் சேர்த்து ஆட்டம் போட வைத்து விட்டீர்கள். தலையங்கத்தின் கடைசி வரி களில் யோசிக்க வேண்டியவர்களை யோசிக்க வைத்துவிட்டீர்கள். சூரியனே மீசைக் கவிஞனுக்கு தென்றலை அனுப்பி தாலாட்டி விட்டது போலிருந்தது. தூண்டிலில் சிக்கிய மீனுடலில் ஈரம் கண்ணீர் விட்டிருக்குமா? கவிதை வரிகள் அருமை. அவை மனத்திலும் சுமை. சுந்தரிக்கு ஏற்ற சுந்தரன்தான் அழகேசன். எதிர் பாராத முடிவு. ஜெ.சுதாகருக்குப் பாராட்டுக்கள். நகரவங்கி இராதாகிருஷ்ணன் அவர்கள் போட்டியை ஆரம்பித்து வைத்துள்ளார். காசு விளையாட்டெல்லாம் சூதுதானே! சரியான சூடான வரிகள். விடியல் நித்தம் புலரும் பொழுதில் இல்லை. அது மனதில் இருக்க வேண்டும் என்ற இலட்சுமிமைந்தனின் கவிதை வரிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

**பொன். குமார், சேலம்.**

மும்பை தாக்குதலுக்கு முக்கிய காரணம் இந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைத்து இந்தியாவை உலகலவில் தலை குனியச் செய்வதாகும். அந்நிய சக்திகளே பொறுப்பு. இச் சக்திகளை முறியடித்தாலே உலகம் அமைதியாக வாழ முடியும். 14 -ஆம் ஆண்டில் மகாகவி அடியெடுத்து வைப்பாது பாராட்டுக்குரியது. தொடர வாழ்த்துக்கள். வெற்றிச் செல்வம் கவிதை பொறாமையில் வாழ்பவர்களை ஐந்தறிவுகள் எனச் சாடியுள்ளது. நீலநிலா செண்பகராஜனின் குழந்தையின் கேள்வி நன்று. பாரதியின் கருப்புக்கோட்டுக் கவிதை சிந்திக்கச் செய்தது. சரி.. கருப்பா? கறுப்பா? எது சரி? தூண்டுகோல் பகுதி பலருக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. இளங்கவி அருளின் சொற்கள் உறங்காது பேசிக்கொண்டே இருக்கின்றன.

**கா.இர. குப்புதாசு, செஞ்சி**

*மும்பை குறித்த தலையங்கம் ஆள்வோருக்கான இலக்கண வரம்பினை எடுத்துச் சொன்னது. நினைவுத்துளிகளில் நீ எந்தத் துளி! கவிதை வரிகள் நினைவலைகளின் நிதர்சனத்தைத் தேடியது. கடவுள் என்பது கள்ளங்கபடமற்ற உள்ளங்களின் உறைவிடம். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற பொதுநோக்கின் புகலிடம் மட்டுமல்ல, பிறப்பிடமும் கூட! கருவாடு மீனாகாது! பணப்பேய்கள் ஒருபோதும் குணம் காட்டாது. உண்மையை உணரும் நொடியே விடியல். விடியல் காண விழித்தெழுவோம். சட்டக்கல்லூரி நிகழ்வுகள் சமுதாயத்தின் அவலங்கள். களையப்பட வேண்டிய கருநாகப் புற்றுகள். முறுக்கு மீசைக்காரன் மீண்டும் வரவேண்டும். விழுந்துபோன சமுதாயத்தை எழுப்பித் தர வேண்டும்.*

**தீபம்.எஸ். திருமலை, சென்னை -4.**

*பூனைகளோடு பாரதி கொஞ்சி விளையாடுவது போன்ற அட்டைப்படம் அருமை. வழக்கம் போல் பக்கத்திற்குப் பக்கம் கவிதை மணக்கிறது.*

---

# உடலில் படர்ந்த பொருள்

தனிமையென்னை
பெருநோய் போல்
என்னுடலையும், உயிரையும்
மெல்ல விழுங்குகிறது.

அதன் கொடூரப் பசிக்கு
நம்பிக்கை துளிகளையும்
கண்ணீர் துளிகளையும்
தாரை வார்த்து மகிழ்கிறேன்

என் நிர்வாணம் பார்த்த சமூகம்
நாடு கடத்த முயற்சிக்கிறது
நிர்வாணமாய் அலையும்
புழுவை, பூச்சியை, விலங்கை என்ன செய்யும்?

நிர்வாணம்
மறைக்க வேண்டிய பொருளா?
மறந்து போக வேண்டிய பொருளா?
இரண்டும் இருக்கட்டும் முதலில்
நிர்வாணத்தைத் தரிசித்துப் பார்!
நிர்வாணம் உயிர்களின் ஜீவநாடி.

**-இளங்கவி அருள்**

# குறிப்புகள்

**வதிலை பிரபா**

*உறவினர் ஒருவர் மதுரையில் புகழ்பெற்ற ஒரு தனியார் கண் மருத்துவ மனைக்கு தன் கண்களை பரிசோதனை செய்வதற்காகச் சென்றார். காலை 10.00 மணிக்குச் சென்ற அவர் இரவு 8.30 மணிக்குத்தான் மருத்துவமனையை விட்டு வெளியே வரமுடிந்தது. காரணம் அவர் தன் கண் அறுவை சிகிச்சையை வேறு ஒரு மருத்துவ மனையில் செய்ததால் (6 மாதத்திற்கு முன்பு) வேண்டுமென்றே காத்திருக்க வைத்துள்ளார்கள். இதே போன்று சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் இன்னுமொரு புகழ்பெற்ற மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்குச் சென்றார். அவர் சுமார் 24 நாட்கள் அறுவை சிகிச்சை செய்தபின்னும் தையல்கூட பிரிக்காமல் இருக்கவேண்டிய நிலை இருந்தது. பல ஆயிரம் செலவழித்தும் பலனின்றி தையலைப் பிரிக்காமலேயே அவரை டிஸ்சார்ஜ் செய்தார்கள். தையலைப் பிரிப்பதற்காக வேறு ஒரு தனியார் மருத்துவமனையில் மீண்டும் சேர்க்கப்பட்டு (4 நாட்களில்) தையல் பிரிக்கப்பட்டது. ஒருவருக்கு குணமாகக்கூடிய நோய் இருக்கிறது என்பதை உறுதியாகத் தெரிந்துகொண்ட மருத்துவர்கள் அவர்களின் பின்புலத்தை அதாவது பணபலத்தை அறிந்து கொண்டு வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்கள். இதனால் பலஆயிரம் வரவு உண்டாகிறது அவர்களுக்கு. இது ஒரு வகையில் நூதன திருட்டு. வெளிநோயாளிகளும் தப்பிப்பது இல்லை. அவர்களுக்கு என்ன நோய் என்று தெரியாமலேயே பல முறை அலைக்கழிக்கப்பட்டு பணத்தைச் செலவழிப்பதுதான் மிச்சம். இதில் தேவையில்லாமல் அதிக மருந்துகள் உட்கொண்டு, அதனால் ஏற்பட்ட பின்விளைவால் கண்பார்வை இழக்கவேண் டிய நிலையும், மற்ற தொல்லைகளும் ஏராளம். சோமாலியா கடற்கொள்ளைக்காரர்களை ஒழிக்க உலக நாடுகள் ஒன்று கூடுகின்றன. இந்த பகற்கொள்ளைக்காரர்களை ஒழிக்க ஒன்று கூட முடியாதா? போலி டாக்டர்கள் என்பது போலி சர்டிபிகேட் மட்டுமல்ல, அசல் சான்றிதழ் வைத்திருந்தும் போலியாக மருத்துவம் பார்ப்பதும்தான்.*

●

*விருதுகள் கூட விருப்பமானவர்களையே தேடி வருகிறது. "துட்டிலக்கியம்" தொடர் மகாகவியில் பல ஆண்டுகளுக்கு முன்பு பரபரப்பை ஏற்படுத்தியது. முன்பு பேச்சாளர்கள் மட்டுமே பணம் ஈட்டிக் கொண்டிருந்தார்கள். இப்போது பணம் ஈட்டவே சிலர் அமைப்பை ஆரம்பிக்கிறார்கள் அல்லது பயன்படுத்துகிறார்கள். மாநிலந் தழுவிய இலக்கிய அமைப்புகள் பல மேல் மட்டத்தில்*

உள்ளவர்களுக்கே பயிற்சிப் பட்டறைகளை ஏற்படுத்தி வருகின்றன. கிராமத்திலுள்ள படைப்பளார்களை அல்லது ஆர்வலர்களை செதுக் கும் உளி அவர்களிடம் இல்லை அல்லது சிற்பி இல்லை. ஆனால் அதற்கு மாறாக, தங்கள் அமைப்புக்குள்ளேயே படைப்பாளர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களை தக்க வைப்பதும் உண்டு. இன்னமும் விருதுகள் பெறாமலே பல விருதுகள் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. பணமே குறிக்கோளாகவும் அல்லது பணமே எதையும் சாதிக்கும் என எண்ணுபவர்கள் அறிய வேண்டும். “பாரதி வாழ்ந்தபோது அவனிடம் பணம் இல்லை” என்பதை.

●

நிக்கோலஸ் கியென் - கியூபக் கவிஞன். கியூப எழுத்தாளர்கள் - கவிஞர்கள் சங்கத் தலைவராகவும், கம்யூனிஷ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகவும் இருந்தவர். இவர் அச்சகத் தொழிலாளியாக தனது வாழ்க்கையை ஆரம்பித்தவர். அப்போதெல்லாம் கவிஞர்கள் கவிதை புனைவது மட்டுமல்ல மிகச் சிறந்த போராளியாகவும் இருந் திருக்கிறார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் நிக்கோலஸ்கியென். குழு மனப்பான்மையிலிருந்து விடுபட வழியின்றி தவிக்கும் கவிஞர் கள் நம்மிடம் உண்டு - தேயிலை செடியிலையின் அடியில் உறைந்து கிடக்கும் அட்டைப் பூச்சிகளாய் நெளிந்துகிடக்கும் கவிஞர்கள் இவரை அறிய வேண்டும். மக்களுக்கான தேவைகளையும் - நாட்டின் காயங்களையும் தனது கவிதைவரிகளில் ஒளிரச் செய்தவர் இவர். சுகுமாரனின் “கவிதையின் திசைகள்” எனும் நூலிலிருந்து காணக்கிடைத்த நிக்கோலஸ் கியெனின் கவிதையொன்று..

**யாராவது சொல்லியிருந்தால்..**

நாம் இருவரும்
வெறும் பரிச்சயக்காரர்கள் மட்டுமே
காலமொன்று வருமென
யாராவது சொல்லியிருந்தால்
அதை நான் நம்பியிருக்க மாட்டேன்.
வெறும் பரிச்சயக்காரர்கள் போல
வெயிலையும், மழையையும் பற்றி பேசிக் கொண்டிருப்பதை
யராவது பார்க்க நேரும் எனச் சொல்லியிருந்தால்
அதை நான் நம்பியிருக்க மாட்டேன்.
ஆ! இவ்வளவு கூரான
கட்டாரிக் காயத்திலிருந்து இரத்தம் சிந்தி
இறந்து போனேன் நான் என்று
யாராவது சொல்லியிருந்தால்
அதை நான் நம்பியிருக்க மாட்டேன்.

## உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தில் இணைந்த புதிய உறுப்பிதழ்கள்

63 முகில்வண்ணன் - திரு. முகில்வண்ணன்,
தென்றல் கணினிஅச்சகம், 10, சேரன் தெரு, பெரம்பூர், சென்னை-11.

## சிற்றிதழ் செய்திகள்

வணக்கம் தமிழகம் : மாத இதழ் ஆசிரியர் : திருமதி. எஸ். மீனாட்சி
முகவரி :18/34 இரட்டை வீதி, அக்ரஹாரம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 5.
தனி இதழ் : ரூ. 3/ ஆண்டுச் சந்தா : ரூ. 60/-

தமிழர் முழக்கம் : ஆசிரியர் : திரு. வேத குமார்
முகவரி : No. 487, 18th Cross, II Stage, Indira Nagar, Bangalore - 560 038.
தனி இதழ் : ரூ. 6.50/ ஆண்டுச் சந்தா : ரூ. 100/-

மீட்சி : ஆசிரியர் : இருமாத இதழ் திரு. குறிஞ்சிக் கபிலன்
முகவரி :78/116 பெரியார் இல்லம், தெற்கு அக்ரஹாரம், வத்திராயிருப்பு - 626 132.
தனி இதழ் : ரூ. 5/ ஆண்டுச் சந்தா : ரூ. 30/-

வணக்கம் தமிழகம் : மாத இதழ் ஆசிரியர் : திருமதி. எஸ். மீனாட்சி
முகவரி :18/34 இரட்டை வீதி, அக்ரஹாரம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 5.
தனி இதழ் : ரூ. 3/ ஆண்டுச் சந்தா : ரூ. 60/-

கடிசியா நியூஸ் : மாத இதழ் ஆசிரியர் : திரு. சி. பிருந்தாவன்
முகவரி : 8/2 பட்டேல் ரோடு, விருதுநகர் - 625 001.
ஆண்டுச் சந்தா : ரூ. 300/-

தெலுங்கர் கீதம் : மாத இதழ் ஆசிரியர் : திரு. டி. இராதாகிருஷ்ணன்
முகவரி : ஏ4, டி.என்.எச்.பி.காலனி, எல்.டி.சி. ரோடு. மனிரை -2.
தனி இதழ் : ரூ. 15/

முப்படைத் தளபதி : மாலை நாளிதழ் (4பக்கம்)
ஆசிரியர்.எம்.பி.மதிமகாராஜா
முகவரி :28, முதல் மாடி, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி -1
தனி இதழ் : ரூ. 2/-

### முகவரி மாற்றம்

இனிய நந்தவனம் : ஆசிரியர் : திரு. நந்தவனம் சந்திரசேகரன்
முகவரி : எண். 18, பெரியசெட்டித்தெரு, உறையூர், திருச்சி -3.

Published and owned by Vathilaipraba from 2-14-1 Sarvapalli Street, Vathalagundu - 624 202. Printed at Pannai Atchagam, Azeez Pettai, Vathalagundu by Mr. Gnanaprakasam. Editor. VATHILAIPRABA.